செங்கோட்டை நகராட்சி

19.03.2020 அன்று நடைபெற்ற நகர்மன்ற கூட்டத்தின் தீர்மானங்கள்

மன்றப்பொருள்..1

வார்டு மறுவரையறை ஆணையம், மாவட்ட வார்டு மறுவரையறை அலுவலர் ஆகியோர்களின் வழிகாட்டுதலின்படி இந்நகராட்சியால் சமர்ப்பிக்கப்பட்ட வார்டு மறுவரையறைக்கான கருத்துருவிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதை அடுத்து தமிழ்நாடு அரசிதழ் எ. 407 நாள். 14.12.2017ல் வார்டு மறுவரையறைககான தமிழக அரசின் ஒப்புதல் அளிக்கப்பட்டது குறித்து அறிக்கை வெளியிடப்பட்டது.

இதனை அடுத்து உள்ளாட்சி அமைப்புகளில் 9 மாவட்டங்களுக்கு வார்டு மறுவரையறை மேற்கொள்ளுதல் தொடர்பாக, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் அவர்களால் நடத்தப்பட்ட 13.01.2020ந் தேதிய காணொளி காட்சி கூட்டத்தில் சில அறிவுரைகள் வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் 575/2020/தேர்தல், நாள். 21.01.2020-ல் வார்டு மறுவரையறையினை மறுஅறிவிக்கை செய்வது நிமித்தம் உரிய கருத்துரு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் வழியாக சமர்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பொருட்டு வார்டு மறுவரையறையினை மறுஅறிவிக்கை செய்தற்கான கருத்துரு உரிய வழிமுறையாக தமிழ்நாடு வார்டு மறுவரையறை ஆணையத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்க மன்றம் தனது தீர்மான எண். 215 நாள். 20.02.2020 ஒப்புதலின் படி வரைவு வார்டு மறுவரையறை பொதுமக்களின் பார்வைக்கு வெளியிடப்பட்து. வரப்பெற்ற ஆட்சேபனை மனுக்கள் அனைத்தும் தமிழ்நாடு மாநில மறுவரையறை ஆணைய விதிகள் 6(1) a b c படி2011 மக்கள் தொகை மற்றும் 31.03.2019 குடியிருப்பு வீடுகளின் அடிப்படையில் வார்டு மறுவரையறை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் ஆட்சேபணைகள் ஏற்கும் கையில் அமையபெறவில்லை, மேலும் தமிழ்நாடு மாநில மறுவரையறை ஆணையத்தின் தலைவர் அவர்களின் மண்டல அளவிலான கருத்துக் கேட்பு கூட்டம் 10.03.2020 அன்று நடைபெற்றதில் ஆட்சேபணை கருத்துகள் மீது பரிசீலனை மேறகொள்ளடப்பட்டது. ஆட்சேபணைகள் அனைத்தும் விதிகளின்படி ஏற்றுக்கொள்ளும் வகையில் அமையப்பெறவில்லை என்பதால் நிராகரிக்கப்பட்டதால் இறுதி வார்டு மறுவரையறை பட்டியல் மன்றத்தின் பர்ர்வைக்கும் பதிவிற்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு..

இறுதி வார்டு மறுவரையறையினை மன்றம் அங்கீகரித்து அனுமதிக்கலாம்

(ந.க.எண். 1337/2017/பி1)

தீர்மானம் எண். 216 இறுதி வார்டு மறு வரையறை அங்கீகரித்து அனுமதிக்கப்பட்டது.

மன்றப்பொருள்.2

செங்கோட்டை நகராட்சி பொதுசுகாதார வாகனம் எண். டி.என்.76 பி.8356 க்குரிய தரச்சான்று முடிவடைந்த நிலையில் தகுதிச் சான்று பெறுவதற்குரிய பணிகள் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண். 166 நாள். 18.07.2019ல் அனுமதி வழங்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கு, 30.07.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை கீழ்க்காணும் முறையில் ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளதற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரி மன்றப்பொருள் ஒப்புதலுக்கு

| வ. எண் | பணியின் விவரம் | நடராஜன் மோட்டார் | மூஸா இன்ஜினியரிங் |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| | | ஒர்க்ஸ், தென்காசி | ஓர்க்ஸ், தென்காசி |
| | செங்கோட்டை நகராட்சி பொதுசுகாதார வாகனம் எண். டி.என்.76 பி.8356 க்குரிய தரச்சான்று முடிவடைந்த நிலையில் தகுதிச் சான்று பெறுவதற்குரிய பணிகள் மேற்கொள்ள | ரூ.52,300/- | 47,950/- |

அலுவலகக்குறிப்பு.

பெறப்பட்ட 2 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்தபட்ச விலைவிகிதமாக ரூ. 47,950/-க்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள மெஸர்ஸ் மூஸா இன்ஜினியரிங் ஓர்க்ஸ் நிறுவத்தின் ஒப்பந்தப்புள்ளிக்கு, பணி உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்

தீர்மானம் எண். 217 பின்னேற்பு வழங்கப்பட்டது.

மன்றப்பொருள்..3

செங்கோட்டை நகராட்சி பகுதியில் 1 முதல் 24 வார்டு வரையிலுள்ள பகுதிகளுக்கு சொத்து வரி, குடிநீர் கட்டணம், குத்தகை இனம் ஆகிய அனைத்து வரி இனங்களையும் நகராட்சி ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் பணி மேற்கொள்ள 04.01.2020 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விவரங்களின் மன்றப்பொருள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | தி.கண்ணன் (காயத்திரி ஆட்டோ) | பி.குமார் (சத்தியஜோதி ஆட்டோ) | கே.ஜலீல் அண்ணாவி (ஆஷிகா ஆட்டோ |
|---|---|---|---|---|
| 1 | செங்கோட்டை நகராட்சி பகுதியிலுள்ள சொத்து வரி, குடிநீர் கட்டணம், குத்தகை இனம் ஆகிய அனைத்து வரி இனங்களை ஒலி பெருக்கி மூலம் விளம்பரம் பணி செய்ய | ரூ.1700/- | ரூ.1690/- | ரூ.1650/- |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்தபட்ச விலைவிகிதமாக ரூ. 1650/-க்கு விலைப்புள்ளி வழங்கியுள்ள திரு.கே.ஜலீல் அண்ணாவி (ஆஷிகா ஆட்டோ) என்பவரின் விலைப்புள்ளி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

தீர்மானம் எண். 218 ஒப்புதல் வழங்கப்பட்டது.

மன்றப்பொருள்..4

2020-2021 ஆம் ஆண்டிற்க்கான உத்தேச வரவு செலவுத் திட்டம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு.. ஒப்புதல் வழங்கலாம்.

தீர்மானம் எண். 219 ஒப்புதல் வழங்கப்படுகிறது

மன்றப்பொருள்..5

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் செங்கோட்டை நகராட்சி பகுதியில் கீழ்க்கண்ட இடங்களில் உள்ள அங்கன்வாடி மையங்களில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள, தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செயல் முறை ஆணை எண். 77/அ3/2020 நாள்.. 03.02.2020 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 20.02.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணி விவரம் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | செங்கோட்டை பம்புஹவுஸ் ரோடு அங்கன்வாடி மையத்தில் மேம்பாட்டுப்பணிகள் மேற்கொள்ள | ரூ. 2.00 லட்சம் | திரு.தா.ஆபேல் ஜெயசீலன் | 0.02 சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு.எஸ்.பரமசிவன் | 4.76 சதவிகிதம் மதிப்பீட்டை விட கூடுதல் |
| 2 | செங்கோட்டை கே.சி.ரோடு (பாண்டியர் சமுதாயம்) அங்கன்வாடி மையத்தில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள | ரூ. 2.00 லட்சம் | திரு.தா.ஆபேல் ஜெயசீலன் | 0.03 சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு.எஸ்.பரமசிவன் | 4.49 சதவிகிதம் மதிப்பீட்டை விட கூடுதல் |

அலுவலககுறிப்பு

மேற்படி பணிகளுக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தக்காரர் திரு.தா.ஆபேல்ஜெயசீலன் என்பவர் வ.எண். 1ல் உள்ள பணிக்கு 0.02 சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவாக வழங்கிய ஒப்பந்தப்புள்ளிக்கும் வ.எண் 2ல் உள்ள பணிக்கு 0.03 சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவாக வழங்கிய ஒப்பந்தப்புள்ளிக்கும் ஒப்புதல் வழங்கலாம்

தீர்மானம் எண். 220 அலுவலக குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.